உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

*S.C No.583/2023*

பெயர் : சேவுகபெருமாள்*(*அ.சா.*3)*
தகப்பனார் பெயர் : சின்னையா
கணவர் பெயர் :
வயது :*56*
கிராமம் :பூதமங்கலம்
வட்டம் :மேலூர்
தொழில் :

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

*26.09.2024*

**முதல் விசாரணை:**

எங்கள் ஊரில் உள்ள அழகு செட்டியார் உடைய மனைவி அமிர்தத்தையும், அவருடைய மகள் நதியாவையும் தெரியுமா என்றால் தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியும். நதியாவுடைய அம்மா அமிர்தத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே கல்லுக்கால் தொடர்பான பிரச்சினை இருந்து வந்தது. சுமார் *3* ஆண்டுகளுக்கு முன்னர் நதியாவுடைய அம்மா அமிர்தம் பூதமங்கலத்தில் கல்லுக்கால்களை பிடிங்கிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு கத்திக்கொண்டு வந்தார்கள். பூதமங்கலத்தில் தான் நதியாவுடைய அம்மா குடியிருக்கிறார். ஆஜர் எதிரிகளும் பூதமங்கலத்தில் வசித்து வருகிறார்கள். காலை சுமார் *10.30* மணியளவில் அமிர்தம் கல்லுக்கால்களை பிடிங்கிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு கத்திக்கொண்டு வந்தார். நதியாவும், அமிர்தமும் இது தொடர்பாக ஆஜர் எதிரிகள் இருக்கும் இடத்திற்கு கேட்க சென்றார்கள். அப்போது பகல் சுமார் *11.00* ல் இருந்து *12.30* மணிக்குள் இருக்கும். பூதமங்கலத்தில் இருந்து கொடுக்கும்பட்டி, சிங்கம்புணரி சாலையானது ஆஜர் எதிரிகள் வீட்டில் இருந்து சுமார் *10* மீ தூரத்தில் உள்ளது. அப்போது நதியா கத்திக்கொண்டு ஆஜர் எதிரிகள் வீட்டில் இருந்து ரோட்டிற்கு ஓடிவந்தார். நதியா எறியுது என்று அலறிக்கொண்டு ஓடிவந்தார். ஆஜர் *1* வது எதிரி நதியா மீது எண்ணெயை ஊற்றியதால் எரிச்சல் தாங்க முடியாமல்

நதியா ஓடிவந்தார். நான் அதை பார்த்தேன். நான் மட்டுமல்ல சுமார் *50-60* ஆட்கள் அதை பார்த்தார்கள். கும்பலில் இருந்த ஒரு நபர் *108* ஆம்புலன்சுக்கு போன் செய்தவுடன், நதியாவை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டார்கள். அதன்பிறகு கீழவளவு போலிசார் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தார்கள். என்னை காவலர்கள் விசாரணை செய்தார்கள். நான் நடந்தவற்றை கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :-

நான் பூதமங்கலத்தில் டீக்கடை வைத்துள்ளேன். நான் காலை *6.00* மணியளவில் டீக்கடையை திறந்து பகல் *11.00* மணிக்கு மூடிவிடுவேன். மாலை வேளையில் கடையை திறக்கமாட்டேன். ஆஜர் எதிரிகள் வீட்டருகே எனக்கு வீடு இருக்கிறதா என்றால் இல்லை. என்னுடைய கடையானது பஸ் ஸ்டாப் அருகே உள்ளது. என்னுடைய வீடு நூலகத்திற்கு அருகே இருக்கிறது. அமிர்தம் கத்திக்கொண்டு வந்தார். அதன்பிறகு நான் நதியாவை அலறல் சத்தம் கேட்டு, வெளியே சென்று பார்த்தேன். அமிர்தம் அம்மாள் பகல் *10.30* மணியளவில் கத்திக்கொண்டு வந்தார் என்றால் சரிதான். நான் வீட்டிற்கு சென்றுவிட்டு, வெளியே வந்துவிட்டேன். அனைவரும் அலறிக்கொண்டு ஓடுவதை பார்த்த நான், நானும் ஓடுனேன் என்றால் சரிதான். அலறிக்கொண்டு நதியாவும், அவரது அம்மாவும் வரும் போது, நான் பார்த்தேன். வேறு எதுவும் நான் பார்க்கவில்லை. ஆம்புலன்சில் ஏற்றிவிட்டார்கள், அதை பார்த்தேன். என்னை சாட்சியம் அளிப்பதற்கு நதியா இன்றைக்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல, போலிஸ்காரர்கள் அழைத்து வந்தார்கள். கல்லுக்கால்களை பிடிங்கியது தொடர்பாக நான் எதுவும் மத்தியஸ்தம் செய்தேனா என்றால் இல்லை, அதுபற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய இருப்பிடத்திற்கு வந்து காவலர்கள் என்னை விசாரித்தார்கள். என்னுடைய பெயர், அப்பா பெயர் எல்லாம் சொன்னேன். அதன்பிறகு சென்றுவிட்டார்களா என்றால் இல்லை, நடந்தவற்றையும் கேட்டார்கள், அதன்பிறகு குறித்து கொண்டு சென்றார்கள்.

என்னை நேற்றைக்கு முந்தைய தினம் தான்காவலர்கள் என்னை வீட்டிற்கு வந்து விசாரணை செய்து நீதிமன்றத்திற்கு வரும்படி அழைத்தார்கள். சம்பவம் நடந்த போது, என்னை விசாரிக்கும் போது, வேறு யாரெல்லாம் விசாரித்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பஸ் ஸ்டாப்பிற்கும் ஆஜர் எதிரிகள் வீட்டிற்கும் இடையே *200*மீ தொலைவு இருக்கும். *200* மீ தொலைவில் இருந்து ஆஜர் எதிரிகள் வீட்டில் நடக்கும் சம்பவங்கள் பற்றி தெரிய வாய்ப்பில்லை என்றும், அவ்வளவு தொலைவில் இருந்து எனக்கு தெரியாது என்றும், மற்றவர்கள் சென்றதை பார்த்து நான் சென்றுள்ளேன் என்றால் சரிதான். காவலர்கள் தகவல் கொடுத்து அரைமணிநேரம், முக்கால்மணி நேரத்தில் வந்துவிட்டார்கள். நான் சொல்வது போல நதியா அலறல் சத்தம் கேட்டு வந்ததாகவும், அதை நான் பார்த்ததாகவும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், நதியா எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நதியா என்னை நீதிமன்றத்திற்கு இன்றைக்கும் அழைத்துவந்துள்ளார் என்றும் அதை தவிர்க்க முடியாமல் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அ.த.கு.வி *;* இல்லை

மறுவிசாரணை *:* இல்லை.

*sd./M.Samundeeswari Prabha*
*Assistant Sessions Judge,*
*Melur*